Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10


# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (18-9-65) இதழ் 218

விசுவாவசு புரட்டாதி 2 ஜ: அவ் பிறை 21 சனிக்கிழமை




## நாகூரில் பிரார்த்தனை

நாகூர், செப். 17

பாகிஸ்தானுடனான யுத்தத்தில் இந்தியாவுக்கு வெற்றி கிடைக்கவேண்டுமென நாகூர் தர்கா டிரஸ்டிகள் நிர்வாகசபை பிரார்த்தனை நடத்தியிருக்கிறது. தேசிய பாதுகாப்பு நிதிக்காக நாகூர் தர்கா ஆலோசனைக்குழு, ரூபா 1001 நன்கொடை அளித்திருக்கிறது. யுத்த முயற்சியில் அரசாங்கத்துக்கு முழு ஒத்துழைப்பு தருவதாகவும் அது அறிவித்திருக்கிறது.

காரைக்கால் அம்ஜு

(6-ம் பக்கம் பார்க்க)

“இந்தியாவுக்கு

# சீன எச்சரிக்கை ஒரு பகிரங்க படையெடுப்பு’

## ஐ. நா. வட்டாரங்களில்பெரும் கவலை; யுதாண்டின் சமாதான முயற்சி பாதிக்கும்?

### தென் கிழக்காசியாவில் யுத்தநிலை விஸ்தரிக்கும் பேரபாயம்

நியூயோர்க், செப். 17

**3 தினங்களுக்குள் சிக்கிம் எல்லையிலுள்ள காவல்நிலைகளை அகற்ருவிட்டால் அதன் அபாய விளைவுகளை ஏற்கும்படி இந்தியாவுக்கு சீன விடுத்திருக்கும் எச்சரிக்கைபற்றி ஐ. நா. வட்டாரங்கள் கவலையடைந்திருக்கின்றன. வெளிப்படையான படையெடுப்பு மிரட்டலையே இந்த எச்சரிக்கை காட்டுவதாக அந்த வட்டாரங்கள் கருதுகின்றன.**

இந்தோ — பாகிஸ்தான் சமாதானத் தூது சம்பந்தமாக யுதாண்டின் முழு அறிக்கையைக் கேட்பதற்காக பாதுகாப்புசபை கூடவிருக்கும் சமயத்தில், சீன மிரட்டல் குறிப்பு ஐ. நா.வுக்குக் கிடைத்தது.

அதே சமயம் சீன இந்திய எல்லை பூராவுமான நிலைமையை அமெரிக்கா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது என வாஷிங்டனில் ராஜாங்க இலாகா அறிவித்தது.

இன்று அதிகாலை 1 மணிக்கு சீன எச்சரிக்கை கையளிக்கப்பட்ட சில மணி நேரத்தில், அதன் வாசகம் பீகிங் ரேடியோமூலம் ஒலிபரப்பப்பட்டது.

வட எல்லையில் சீனப்படைகள் நகர்த்தப்படுவதற்கான அறிகுறி இதுவரை தென்படவில்லையாயினும் அதற்கான சாத்தியம் மறுக்கப்படவில்லை. சீனுவின் பயமுறுத்தல் யுதாண்டின் சமாதான முயற்சியை பாழ்படுத்திவிடக்கூடும் என ஐ. நா. வட்டாரங்கள் மிகுந்த கவலை கொண்டிருக்கின்றன.

சீனப் பிராந்தியத்திற்குள் எந்த ராணுவ நிலையையும் நிறுவவில்லையென ஏற்கனவே பலமுறை இந்தியா மறுப்பு தெரிவித்துவந்திருக்கிறது.

அதே சமயம் பீகிங் ரேடியோ, சண்டையைத் தொடர்ந்து நடத்துவதற்காக பாகிஸ்தானைத் தூண்டிவருவதுடன், தற்போதைய சண்டையில் ஐ. நா. ஒருதலைப்பட்சமாக இந்தியாவை ஆதரித்துவருவதாயும் அடிக்கடி ஒலிபரப்பிவருகிறது.

இதற்கிடையில் காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்காவிட்

(6-ம் பக்கம் பார்க்க)

புத்துவெட்டுவான் கொலை முயற்சிவழக்கு

## எதிரி விடுதலை; சாட்சிக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், சனி

பதினெரு வயதுச் சிறுமி சாட்சியமளித்தபின் ஜூரி சபையினர் விசாரணையை தொடர்ந்து நடத்த விரும்பவில்லையென தெரிவித்ததை தொடர்ந்து, புத்துவெட்டுவான் கொலை முயற்சி வழக்கில் எதிரியை நீதியரசர் விடுதலை செய்தார்.

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் புத்துவெட்டுவான் கொலை முயற்சி வழக்கு நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. சி. முன்னிலையில் நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 64-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் தேதி புத்துவெட்டுவானில் ஏ. பாலசிங்கம் என்பவர் செல்லையா என்பவரைக்கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், திரு, எம். ஆலாலசுந்தரத்தின் உதவியுடனும் திரு. பி. ரி. ஜி. பிரிட்டோவின் அனுசரணையுடனும் ஆஜரானுர். எதிரிக்காக அரசாங்கத்தால் திரு. ஆர். கோபாலரத்தினம் நியமிக்கப்பட்டிருந்தார்.

தீர்ப்பளிக்கு முன் நீதியரசர் சாட்சிய மளித்த செல்லையாவை எச்சரிக்கை செய்தார். அப்பொழுது நீதியரசர் கூறியதாவது:-

செல்லையாவும் அவரது மகளும் பொய்ச்சாட்சியம் அளித்துள்ளார்கள். ஜூரி சபையினர் எல்லோரும் இதனை ஏற்றிருக்கிருர்கள். சந்தேகத்தின் பேரிலேயே எதிரியை இவ்வழக்கில் சம்பந்தப்படுத்தியுள்ளார்கள். சிறுமிக்கு சாட்சியம் சொல்லிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. பொய்ச் சாட்சியம் அளித்ததற்கு சிறைத்தண்டனை விதித்திருப்பேன் ஆனுல் பிள்ளைகள் இருப்பதால் அப்படிச் செய்யவில்லை கடவுளால் அளிக்கப்பட்ட பிள்ளைச்செல்வங்களை நன்கு வளர்க்கவேண்டும்.

வன்னியசிங்கம் நினைவுவிழா

பொதுக்கூட்டம்

கொக்குவில் - காங்கேசன் துறை வீதி (3-ம் கட்டை, மாத்தனை கோவிலடி.)

19-9-65

ஞாயிற்றுக்கிழமை பி.ப. 6 மணி

**தலைவர்: திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், கியூ. ஸி.**

முக்கிய பேச்சாளர்கள்:

கௌரவ அமைச்சர்
மு. திருச்செல்வம், கியூ. ஸி.
செ. இராசதுரை பா. உ.,
மட்டக்களப்பு
டாக்டர் இ.மு.வி. நாகநாதன்,
பா. உ. நல்லூர்
ஜனுப் மஷூர் மௌலானு

அமரன் திருமலை யாத்திரைப்படமும் காண்பிக்கப்படும்.

## ரூ. 42 லட்சம்செலவில் பாலம்

சென்னை, செப். 17

கோடம்பாக்கத்தில் ரூ. 42 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட நவீன பாலம் ஒன்றை முதன்மந்திரி திரு. பக்தவத்சலம் இன்று திறந்துவைத்தார். பாலத்துக்கடியில் முக்கிய கடைத்தெரு நிறுவத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

## சிங்கப்பூர் ரஷ்யாவுக்காம்!

சிங்கப்பூர், செப். 17

பிரிட்டன், சிங்கப்பூர் தளத்தை அமெரிக்க உபயோகத்துக்கு கொடுக்மானுல், அதைத் தாம் ரஷ்யாவின் உபயோகத்துக்கு விடப்போவதாய்ப் பிரதமர் லீ குவான் யூ தெரிவித்திருக்கிருர்.

## தமிழ் மக்கள் மத்தியில் மனமாற்றம் ஏற்படவேண்டும்

### சமூக சீர்திருத்த வாரத்தையொட்டி யாழ். மேயர் விடுத்துள்ள செய்தி

யாழ்ப்பாணம், சனி

தமிழ் இனத்தின் சாபத்தீடான தீண்டாமையை ஒழிப்பதற்கு சமூக சீர்திருத்த வாரம் கொண்டாடப்பட வேண்டுமென்று தீர்மானித்த தமிழரசுக்கட்சி மேற்படி வாரத்தைக் கொண்டாடுவதற்கு திரு. வன்னியசிங்கம் அமரரான தினத்தை அடுத்துவரும் வாரத்தைத் தெரிந்து எடுத்தது பொருத்தமானதே’.

இவ்வாறு யாழ்ப்பாண மேயர் திரு எஸ். ஸி. மகாதேவா சமூக சீர்திருத்த வாரத்தையொட்டி வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அமரர் வன்னியசிங்கத்தைப்போல் தீண்டாமை ஒளிப்புக்காகத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டவர்கள் இலங்கையில் வேறெருவருமில்லை. ஆகவேதான் அம்முடிவை அரசாங்கம் உள்ளிட்டுஏனையோரும்முன் வந்து ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள். சமூக சீர்திருத்த வாரத்தை பாடசாலைகளிலும் காரியாதிகாரி அலுவலகங்கள் மூலம் வடமாகாணம் பூராவும் கொண்டாடுவதற்கு ஒழுங்குகள் செய்து தந்து உதவிய அரசாங்கத்தையும் நான் பாராட்டுகின்றேன்

சமூக சீர்திருத்தக் கருத்துக்களை நல்ல முறையில் பரப்பிவந்த பத்திரிகைகள் இப்போது சமூக சீர்திருத்தவாரத்தையொட்டி ஆசிரியர் தலையங்கங்களைத் தீட்டி சூழ்நிலைக்கு ஒத்துப் போகக்கூடியதாக பொது மக்கள் அபிப்பிராயத்தை வளர்க்கத் தலைப்பட்டிருத்தலையும் பாராட்டாதிருக்க முடியாது.

விடுதலைப் போராட்டங்களை நடத்துபவர்கள் யாவரும் முதலில தங்களைத் தாங்களே புனிதப்படுத்திக் கொள்ள வேண்டும் இன விடுதலையை நாடும் தமிழ் பேசும் இனமும் தன்னைக் களங்கப்படுத்துவதான சாதி பேதத்தை முற்ருக ஒழித்து விடவேண்டும் சமூகத்தில் ஒருசாராரை அடிமைப்படுத்தி அவர்களுக்கு விடுதலை தர மறுத்துக்கொள்ளும் ஒரு சமூகம் எந்த அடிப்படையில் இனவிடுதலையை நாட முடியும்? ஜனநாயகதர்மத்தைப் பேணுதவர்கள், பேணமறுப்பவர்கள் ஜனநாயக உரிமைளுக்காக எப்படி வாதாட முடியும்? ஆகவே தமிழ் பேசுமினம் ஜனநாயக உரிமைகளுக்குப் போராடு முன்பு தன்னை முதலில் அதற்குத் தகுதியுடையதாகத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்காகவே சமூக சீர்திருத்தவாரம் கொண்டாடப்படவிருக்கின்றது.

காலம் வந்துவிட்ட ஓர் இலட்சியத்தைவிட சக்தி வாய்ந்த வேறென்று முழு உலகத்திலும் இல்லை. மகாத்மாகாந்தி தனது வாழ்நாள் முழுவதும் தீண்டாமையை ஒழிக்க நடத்திய அறப்போர், சட்டம் இயற்றப்பட்டதோடு நின்றுவிடாது சகல மக்களிடத்தும் மனமாற்றத்தைக் கொண்டுவந்ததாக விளக்கியுள்ளார். இனபேதத்துக்கு எதிராக அமெரிக்காவில் பெரும் இயக்கத்தை நடத்திவரும் நீக்ரோக்கள் தலைவர் வணக்கத்துக்குரிய மார்ட்டின் லூதர்கிங் என்பார் ஆகவே மகாத்மாவால் இந்தியாவில் சாதிக்கப்பட்டதாக மார்ட்டின் லூதர்கிங்கால் கூறப்படும் மனமாற்றம் இங்கு தமிழ் பேசும் மக்களுக்கும் ஏற்பட வேண்டும். அந்த மனமாற்றத்தை இச்சீர்திருத்த வாரம் ஏற்படுத்தித் தருமென நம்பி உழைப்போமாக.

பம்பலப்பிட்டி, வெள்ளி

சென்ற வருடம் செப்டம்பர் 30ந் தேதிவரை அறவிடப்படாத வருமானவரி 9 கோடியே 82 லட்சமென வருமானவரிக் கமிஷனரின் 1964ம் வருடத்து நிர்வாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகைகளுக்கு
யப்பான்
ஜுவலர்ஸ்
64, கன்னுதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518. தந்தி: 'யப்பான்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பாம்புகளும், புலிகளும், இவைபோன்ற மற்றவையும், நம் மனத்தில் நாம் இடங்கொடுத்திருக்கின்ற தீய எண்ணங்களுக்குக் கடவுளால் அளிக்கப்பட்ட பதில் என்பது என் நம்பிக்கை. எல்லா உயிரும் ஒன்றே என நான் நம்புகின்றேன்.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 38[illegible]

[illegible] புரட்டாதி 2 உ (18 9-65)


## இலங்கையும் நடுநிலைமைக்கொள்கையும்

உலகில் யுத்த சூழ்நிலை தோன்றியுள்ள சமயத்தில் அதுவும் நமது நட்பு நாடுகள் இரண்டு நமது நாட்டுக்கருகில் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்கையில் நமது நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையில் குறிப்பாக நடுநிலைமைக் கொள்கையில சிறிதும் வழுவாது பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தினது மட்டுமல்ல பொதுமக்களினதும் கடமையாகும். இங்குள்ள வெளிநாட்டுத் தூதரகங்களும் இந்நாட்டின் வெளி விவகாரக் கொள்கைக்கு இடையூறு விளைவிக்காவண்ணம் நடந்துகொள்ள வேண்டியதும் அவசியம்.

இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்து ஆட்சிக்குவந்த அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் நடுநிலைமைக் கொள்கையையே வலியுறுத்தி வந்துள்ளன. திரு. பண்டாரநாயகாவின் தலைமையிலான எம்.ஈ.பி. அரசாங்கமும், திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கமும் நடுநிலைமைக் கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்து வந்தன. இன்றைய தேசிய அரசாங்கமும் இதே நடுநிலைமைக்கொள்கையைப்பின் பற்றுவதாக உறுதியளித்திருக்கிறது.

இந் நிலையில் இங்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த சிலர் இந்திய-பாகிஸ்தான் யுத்தம் சம்பந்தமாக நடந்துகொண்டுள்ள முறை கண்டிக்கத்தக்கது. முன்னாள் மந்திரிகளில் ஒருவரான ஜனாப் பதியுதீன் மாமூத் தலைமையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த பிரமுகர்கள் பலர் இந்திய—பாகிஸ்தான் யுத்தத்தில் ஒரு நாட்டுக்குச் சார்பாகக் கருத்து வெளியிட்டிருப்பதுடன் மற்றொரு நாட்டைக் கண்டித்தும் பேசியிருக்கின்றனர். இது கவலையளிப்பதுடன் கண்டிக்கவேண்டிய செயலுமாகும். இவர்கள் இந்நாட்டில் இன, மத, வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பி பிரிவினைக்குத் தூபம் போடுகிறார்கள் என்று சொல்லாமல் வேறுஎன்னவென்று கூறுவது? இவர்களின் இச்செயலைக் கண்டித்தால் மட்டும் போதாது. நாட்டின் அமைதியைக் கெடுத்து வகுப்புத் துவேஷத்தையும், பிரிவினையையும் கிளப்பிப் பொதுமக்களைத் தவறான வழிக்குத் தூண்டிவிடும் இவ்வித அரசியல்வாதிகள் மீது, இப்பொழுதுள்ள சட்டத்துக்குட்படவே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துத் தண்டிக்கலாம்; தண்டிக்கவேண்டியது அவசியமும்கூட. இந்திய-பாகிஸ்தான் யுத்தத்தில் எந்த ஒரு நாட்டுக்கும் இலங்கை மக்கள் சார்பாகக் கருத்துத் தெரிவிப்பதோ, உதவியளிக்க முன்வருவதோ, தொண்டர்களை அனுப்பத் தயாரெனக் கூறுவதோ இலங்கையின் நடுநிலைமைக் கொள்கைக்கு ஏற்றதல்ல. இலங்கையின் அமைதிக்கும் இது நிச்சயம் உதவிபுரியாது. இந்நாட்டில் உண்மையான ஜனநாயகம் நிலவவேண்டுமெனவும், அமைதி நிலவ வேண்டுமெனவும் அரசியல் தலைவர்களும், அரசியல்வாதிகளும்விரும்பினால் யுத்த சூழ்நிலை தோன்றியிருக்கும் சமயத்தில் எந்த ஒரு பிரிவினருக்கும் சாதகமாகவோ பாதகமாகவோ கருத்துத் தெரிவித்து இலங்கையையும் யுத்தத்தில் இழுத்துவிடாமல் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியிலேயே கவனம்செலுத்தவேண்டும்.

இதேசமயம் இந்நாட்டிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் இந்நாட்டு அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கைக்கு இடையூறு விளைவிக்காமல் நடந்துகொள்ள வேண்டுமென்று கூறுவது இச்சந்தர்ப்பத்தில் அவசியமாகும். இங்குள்ள அரசியல் கட்சிகளுக்கும் பொது மக்களுக்கும், பொது ஸ்தாபனங்களுக்கும் தங்கள் கொள்கையும், செயலும்தான் சரியென வற்புறுத்தி எமது அரசாங்கத்தின் கொள்கைக்கு மாறாக தகவல் சஞ்சிகைகளை விநியோகித்து அரசாங்கத்தைச் சங்கடத்தில் ஆழ்த்துவது சரியான ராஜீய நடவடிக்கையாகாது.

இன்றைய நிலையில் இலங்கை மக்களும், இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களும் இலங்கையின் வெளிவிவகார- நடுநிலைமைக்கொள்கையை ஆதரித்து நடந்துகொள்ள வேண்டும்.

விஞ்ஞான கூடத்தை

## கல்வி அதிகாரி திறந்துவைப்பார்

வவனியா, வெள்ளி

42,000 ரூபா செலவில் பொதுமக்களால் வவனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் கட்டப்பட்ட விஞ்ஞான கூடமொன்றை இம் மாதம் 25-ந் திகதி சனிக்கிழமை கல்விஅதிகாரி திரு. இ.எச்.டி. அல்விஸ் திறந்து வைப்பார். இவ்விஞ்ஞான கூடம் வவனியா பொதுமக்களின் இடைவிடா முயற்சியாலும் அவர்களின் ஊக்கத்தினுலும் கட்டிமுடிக்கப் பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

அன்று மகாவித்தியாலயத்தில் வேறு ஒரு நவீன மண்டபமும் வவனியா எம். பி. திரு ரி. சிவசிதம்பரத்தினுல் திறந்துவைக்கப்படும்.

—

பம்பலப்பிட்டி, வெள்ளி

கொழும்பு புறக்கோட்டையில் இரு வர்த்தகர்களிடமிருந்து 1000 மூடை மல்லி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளால் பறிமுதல்செய்யப்பட்டது.

வடபகுதி

## சர்வகலாசாலை கலைப்பகுதி புகுமுக பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

சர்வகலாசாலைப் புகுமுக பரீட்சையில் வடபகுதியிலிருந்து சித்தி பெற்றோர் விபரம்:-

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி:- கே. கோபாலன், ஏ. கே. எம். நிலாஸ்டீன், கே. இராஜலிங்கம், எம். சரவணபவன், வி. தில்லையம்பலம், எஸ். திருஞானசோதி.

அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி:- ரி. குலசிங்கம், எஸ். வைகுந்தநாதன், கே. இரத்தினம், செல்வி எஸ். சகுந்தலாதேவி.

கனகரத்தினம் மகா வித்தியாலயம்:- எஸ். கனகலிங்கம், கே. எஸ். நடராசா, கே. தனபாலசிங்கம், எப். ஜோசேப்.

நெடுந்தீவு மகா வித்தியாலயம்:- செல்வி கே. அன்னலட்சுமி, செல்வி வி. கி. அற்புதமலர்.

டிரிபேர்க்கல்லூரி சாவகச்சேரி:- எஸ். கந்தையே, கே. மயில்வாகனம், கே. நாகராசா, கே. சின்னத்தம்பி, செல்வி ரி. வேலுப்பிள்ளை.

ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை:- கே. கணேசன், என். மாணிக்கம், எம். நடராஜசுந்தரம், வி சாந்தநாதன், எம். செந்தில்நாதன், எஸ். சிவலோகநாதன்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி:- செல்விகள் ஏ. முத்துசாமி, கே. அப்பையா, வி. கமலாம்பிகை, எம். கிருஷ்ணம்பிகை, ரி. லீலாவதி, ரி. மாணிக்கராணி, ரி. சாந்தகுமாரி, ஆர். சத்தியலக்ஷ்மி, எஸ். தவமணி, ரி. உமாதேவி.

சுண்டிக்குழி மகளிர் கல்லூரி:- செல்விகள்;- பி. குமாரசாமி, கே. இராசசூரியர், ஆர். தபிராசா.

திருக்குடும்ப கன்னியாஸ்திரீ மடம் இளவாலை:- செல்வி எம். ரி.ஜே. ஞானப்பிரகாசம்.

இளவாலை மகளிர் ஆங்கில பாடசாலை:- செல்விகள் ஆர். மருதி, எம். எம். செவஸ்தியாம்பிள்ளை, ஏ. செபமாலை, எம். எல். பி. சிமியன்.

திருக்குடும்ப கன்னியாஸ்திரி மடம் யாழ்ப்பாணம்:- செல்விகள் ஏ. எஸ். அலெக்ஸ்சாண்டர், ஜே. ஏ. வி. அலோசியஸ், எம். ஏ. டி' அந்தோனி, எம். எம். செல்வம், ஜே. ரி. குரூஸ், பி. எப். டானியல், ஆர். ஜோசேப். எஸ். சிறில், பி. எல். பி. மரியாம்பிள்ளை, எம். எம். ஏ. சவரிமுத்து, எஸ். வசந்தாதேவி, எம்.ரி. ஜி. செபஸ்ரியாம்பிள்ளை.

மெதடிஸ்த மகளிர் கல்லூரி பருத்தித்துறை:- செல்விகள் பி. சின்மயானந்தகுரு, ஜி. நாகலிங்கம், கே. ராஜகுரு, எஸ்.ஜி. சாந்தன், ஜி. ஜி. சரவணமுத்து.

நயினதீவு மகா வித்தியாலம்ம்:- செல்வி என். இந்துமதி.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி:- செல்வி எம். செல்லத்துரை.

உடுவில் மகளிர் கல்லூரி:- செல்வி பி. கே. சின்னத்தம்பி.

இராமநாதன் கல்லூரி சுன்னுகம்:- செல்விகள் ஏ. ஆனந்தநாயகி, சி. ஆர். ராஜநாயகம், பி. கமலாதேவி, எஸ். கமலாதேவி, கே. முத்துகுமாரு, எம். லீலாவதி, ஏ. மங்கயர்க்கரசி, வி. மனோன்மணி, பி. நாகேஸ்வரி, சி. இராஜேஸ்வரி, ஆர். சங்கரப்பிள்ளை, எஸ். சந்திரா ஞானம்மா, கே. தவமணி, வி இராசநாயகம், எஸ். லீலாவதி.

வேம்படி மகளிர் கல்லூரி:- செல்விகள் ஜி எஸ். சென்ஸ்மன், என். பொன்னுத்துரை, பி இராஜதுரை, ஏ. பி. ராஜநாயகம், பி. இராஜரத்தினம், எஸ். இராஜேந்திரம், எஸ். சதாசிவம், ஜி, செல்லத்துரை, எஸ். சுப்பிரமணியம், கே. வீரசிங்கம்

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பரித்தித்துறை:- செல்விகள்: பி. கார்த்திகேசு, ஆர். ஜெகநாதபிள்ளை,

யாழ்ப்ாணம் இந்துக்கல்லூரி:- ஏ. பாலேந்திரன், எம். கதிர்காமநாதன், கே. இராஜலிங்கம், ரி. இராஜநாயகம், எஸ். சண்முகநாதன், ஆர், சோமஸ்காந்தன், கே. வெங்கடாசலம், எஸ். யோகநாதன்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி:- எம். சுவாமிநாதன், வி. தியாகராசா,

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சுன்ஞகம்:- செல்வி- எஸ். சேதுகாவலர், ஆர். ஞானசேகரம்பிள்ளை, கே. கனகசபை, கே. மகாதேவா. ஏ. மேரிஜோசேப், எஸ். சிவனருள்பாதம், இ சுந்தரலிங்கம், என். தங்கராசா, கே. தனபால்சிங்கம், எம். தேவகுணராசா, எஸ். சிவரத்தினம், கே. நடராசா' ஏ, பொன்னையா, எஸ். இராசரத்தினம், கே. சிவதாசன், ரி. சிறிஸ்கந்தராசா, ரி. தேவராசா.

பரமேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணம்:

கே. மகேந்திரன், பி. சிவநாதன்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணல்கல்லூரி:

செல்வி ஆர். அனந்தவனேஸ்வரி, செல்வி ஆர். மகாலக்ஷ்மி, ரி. செல்வரத்தினம்.

காரைநகர் இந்துக்கல்லூரி: ஆர். ஜீவகாருண்யம், வி. சச்சிதானந்த சர்மா, எம். திருநாவுக்கரசு, வி. துரைராசசிங்கம், வி. விஞசித்தம்பி, செல்வி எஸ். இராசபூபதி, செல்வி என். செல்வநாயகி.

கொக்குவில் இந்துக்கல்லூரி: பி. ஆனந்தமனேகரன், கே. காசிநாதர், எஸ் நவநீதகிருஷ்ணன், எம். தனபாலசிங்கம், செல்வி என். நாகலிங்கம்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி: கே. துரைராசா, செல்வி கே. சரோஜா.

வேலணை மகாவித்தியாலயம்: எம். சிவசுப்பிரமணியம்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி: செல்வி கே. பொன்னம்பலம், செல்வி எம். கந்தையா, செல்வி எம். நாகநாதன், செல்வி ஆர். சண்முகம்.

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி: என். கந்தசாமி, கே. மகாலிங்கம், கே. மேகநாதன், எஸ். சற்குணநாதன், ஆர். செல்வரத்தினம், என். சிற்றம்பலம், ரி. துரைராசா, கே. வேலுப்பிள்ளை, செல்வி கே. கிருஷ்ணபிள்ளை, செல்விஎஸ். கந்தையா.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி; சி. நல்லதம்பி.

செங்குந்தா இந்துக்கல்லூரி: செல்வி பி. இராசமணி, என். கதிரேசன், பி. நாகராசன்.

வைத்தீஸ்வர வித்தியாலயம்: கே. பாலகிருஷ்ணன், எஸ். நாகேந்திரன், எஸ். எம். பூகேந்திரன், எஸ். செல்வநாயகம், என். சிவபாதசுந்தரம்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி: வி, எல். லிங்கம், எஸ். கணேசமூர்த்தி, என். புகேந்திரன். ஆர். பேரம்பலம்.

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுகிறது

யுதாண்டின் சமாதான முயற்சி வெற்றிபெறவில்லை. இன்று 18-ந் திகதி சனிக்கிழமையுடன் யுத்தம் நிற்கும் என்ற சோதிடமும் இதனுல் பலிக்கமுடியவில்லை.

இதற்குமாருக இந்தியா—பாகிஸ்தான் சண்டை பல அரங்கங்களிலும் மிகவும் கடுமையாகியுள்ளது. இது இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும்? சமாதானம் ஏற்படுவது மிக மிகக் கடினம் என்கிறுர் அமெரிக்க மந்திரி டீன்ரஸ்க். இதை சீக்கிரத்தில் தீர்க்க முடியாதென்று 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையும் கூறுகின்றது.

முன்னர் காஷ்மீர் சண்டையில் நாள் ஒன்றுக்கு இந்தியாவுக்கு 90 லட்சரூபாய் செலவாயிற்றும். இப்போது ஒருகோடிக்கு மேலிருக்கும். பாகிஸ்தானுக்கும் அநேகமாக அப்படியே இருக்கலாம். உயிர்ச்சேதம் பொருட்சேதம் இவற்றைத்தவிர இரு நாடுகளுக்கும் ஒவ்வொருநாளும் சுமார் இரண்டுகோடிரூபாய் செலவாகுமாயின், இச்சணடை நீடிக்க நீடிக்க இரு நாடுகளின் பொருளாதாரமும் என்ன ஆகுமென்பதை சொல்லத் தேவையில்லை. ஆயுத உற்பத்தி நாடுகளுக்கு நல்லவேட்டைதான்.

ஃ ஃ ஃ

பாகிஸ்தானுக்கு சீனம், இந்தோனேஷியா, துருக்கி, ஈரான், முதலிய நாடுகள் உதவ முன்வந்துள்ளன. ஈராக்கும் உதவுவதாக உறுதி கூறியுள்ளதாம்.

ஆனல் இந்தியாவுக்கோ எந்த நாடும் உதவிசெய்ய இப்படிப் பகிரங்கமாக முன்வரவில்லை! ரஷ்யா, பிரிட்டன், மலேஷியா, ஆப்கனிஸ்தான், அமெரிக்கா முதலிய நாடுகள் நடுநிலைமை வகிக்கின்றன.

யுத்தத்தை நிறுத்த இனி அமெரிக்காவே தன் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்கின்றுர் பாகிஸ்தான் அதிபர் அயூப். ஆனல் அமெரிக்காவோ இதற்குத் தயாரில்லை. ஐ. நா. சபை மூலம்தான் இதற்கான முயற்சியைச் செய்யவேண்டுமென்கிறுர் அமெரிக்க அதிகாரி.

காஷ்மீர் பற்றி ஐ. நா. பார்வையாளர் வெளியிட்ட அறிக்கை பாகிஸ்தானையே குற்றம் சாட்டுகிறது. யுத்த நிறுத்த எல்லையை பாகிஸ்தானே பன்முறையும் மீறியுள்ளதாகக் கூறுகின்றது. இவ்விதம் கூறிய ஒரு ஸ்தாபனமூலம் பாகிஸ்தானுக்கு நியாயம் கிடைக்க் முடியாதென்றும் யுதாண்டின் சமாதான முயற்சி பலிக்காதென்றும் அவர் அமெரிக்காவிலிருந்து புறப்படு முன்னமே சீனம் அபசகுனம் போல் பெரிதாகத் தும்மியதும் இந்தோனேஷியாவும் அதற்கு ஒத்துஊதியது. இவ்விரு நாடுகளும் ஐ. நா. ஸ்தாபனத்தில் இல்லை.

ஃ ஃ ஃ

மேற்குப்பாகிஸ்தானிலிருந்து 600 அமெரிக்கர்களை ஈரானிலிருந்து அமெரிக்க இராணுவ விமானங்கள் வெளியேற்றி வருகின்றன. ஆனல் இந்தியாவிலுள்ள அமெரிக்க குடும்பங்களை வெளியேற்றுவதாக இதை எழுதும்வரை தகவல் இல்லை. பாகிஸ்தானில்தான் இப்போது யுத்த ஆபத்து அதிகமென்பது அமெரிக்காவின் கருத்தா? அமெரிக்காவுக்கு விஷயம் நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

தென்இந்தியாவிலே, யுத்த அரங்குக்கு வெகு தூரத்திலுள்ள, விசாகபட்டணம்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை நிலைகளை மூன்று நாளில் அகற்றாவிட்டால்

# சீனாவும் யுத்தத்திலிறங்கும்?

## ஊடுருவலை நிறுத்துமாறு இந்தியாவுக்கு பீகிங் அரசாங்கம் எச்சரிக்கை

### சிவிலியன்கள்மீது பாகிஸ்தான் நேபாம் குண்டுகளை வீசுகிறது

பீகிங், செப். 17

சீன சிக்கிம் எல்லையிலுள்ள இந்தியாவின் சகல ராணுவ நிலைகளையும் 3 நாட்களில் கலைத்துவிட வேண்டுமென்றும், அப்படிக் கலைக்காவிட்டால் அதனால் ஏற்படும் அபாய விளைவுகளை எதிர்நோக்குமாறும் சீனா இன்று இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. அதேசமயம், சீன--இந்திய எல்லைபற்றி அமெரிக்கா உன்னிப்பாகக் கவனித்து வருவதாயும், சீனாவின் எச்சரிக்கை இதில் அடங்கும் என்றும் வாஷிங்டனில் ராஜாங்க இலாகா அதிகாரி ஒருவர் கூறினார்.

### எச்சரிக்கைக் குறிப்பு

இன்று அதிகாலை 1 மணிக்கு சீனாவின் எச்சரிக்கைக் குறிப்பு பீகிங்கிலுள்ள இந்தியத் தூதராலய அதிகாரியிடம் கையளிக்கப்பட்டது.

சிக்கிம் எல்லையிலுள்ள சீனப்பகுதிக்குள் இந்தியத் துருப்புகள் ஊடுருவல் செய்வதை உடன் நிறுத்த வேண்டும் என்றும் தனது பகுதியிலிருந்து கடத்தப்பட்ட சீனப் பிரஜைகளைத் திருப்பி ஒப்படைக்குமாறும் சீனா தனது குறிப்பில் மேலும் கூறியிருக்கிறது.

அமெரிக்காவின் ஆயுத உதவி கொண்டு தனது பிரதேசத்தை விஸ்தரிக்க இந்தியா முயற்சித்து வருவதாயும், பாகிஸ்தான்மீது பெருமளவில் ஆக்கிரமிப்பு நடத்தியிருப்பது இதற்கு உதாரணம் என்றும் சீனக் குறிப்பில் தொடர்ந்து கூறப்பட்டிருக்கிறது.

### அமெரிக்கா உஷார்

சீனாவின் இந்த எச்சரிக்கைபற்றி அமெரிக்க ராஜாங்க இலாகா அதிகாரி குறிப்பிடுகையில், தென்கிழக்காசியாவில் குழப்பத்தை விஸ்தரிக்க சீனா முயலக்கூடும் என்றும், அமெரிக்கா சீன-இந்திய எல்லை நிலைபற்றி உன்னிப்பாகக் கவனித்து வருகிறது என்றும் கூறினார்.

### யுதாண்ட்

அதேசமயம் யுதாண்ட் பாதுகாப்புசபைக்குச் சமர்ப்பித்துள்ள பூர்வாங்க அறிக்கையில் காஷ்மீர் சண்டையை நிறுத்துவதுபற்றி ஆயூபும் சாஸ்திரியும் சந்திக்க வேண்டுமெனத் தாம் கூறிய யோசனையைப் பாகிஸ்தான் நிராகரித்துவிட்டதாகக்கூறியிருக்கிறார். இந்தியாவின்பதில் யுதாண்டுக்குஇன்னும்அனுப்பப்படவில்லை.

### மாஸ்கோவில்....

யுதாண்டின் நிபந்தனையற்ற யுத்தநிறுத்த யோசனையை இந்தியா ஏற்கச் சம்மதம் தெரிவித்திருப்பது குறித்து மாஸ்கோவில் திருப்தி தெரிவிக்கப்பட்டது. பாகிஸ்தானுக்கு உடனடியாக ஆயுதசப்ளை செய்வதாக இந்தோனேஷியா கூறியிருப்பது தனக்குப் பிடிக்கவில்லை என ரஷ்யா, அந்நாட்டிடம் தெரிவித்திருக்கிறது. இன்று நள்ளிரவு பாதுகாப்புசபை மீண்டும் கூடும்போது யுதாண்ட் தமது சமாதானத் தூதுபற்றி விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பார் என அறிவிக்கப்பட்டது.

தனது நிபந்தனையற்ற போர்நிறுத்த யோசனைகளை பாகிஸ்தான் ஏற்றால் தாமும் அதை ஏற்கத் தயார் என இந்தியா கூறியிருப்பதாய் யுதாண்டின் பூர்வாங்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### அயூப்கான் கடிதம்

இதற்கிடையில் ஐ. நா. தலைமையகத்துக்கு ஜெனரல் அயூப்கான் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் உபகண்டத்துக்கு மீண்டும் மீண்டும் ஆபத்து இருக்காத வகையில் இரு நாட்டுப் பிரச்னைகளும் தீர்க்கப்பட வேண்டும் எனக் கூறியிருக்கிறார்.

யுதாண்ட் நேற்று நிருபர்களிடம் பேசியபோது, சண்டை இன்னும் நிற்காவிடினும், சண்டை நிறுத்தத்திற்கான முயற்சியைத் தாம் தொடர்ந்து மேற்கொள்ளப் போவதாய்த் தெரிவித்தார்.

### நேபாம் குண்டுவீச்சு

இதற்கிடையில் ஸியால்கோட் முனையில் பாகிஸ்தான் நேபாம் குண்டுகளை சிவிலியன்கள்மீது உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறது. நேபாம் குண்டுகள் உபயோகிக்கப்படுவதை ஜெனிவா ஏற்பாடு தடை செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் குண்டுகளடங்கிய பெட்டிகளில் அமெரிக்க அடையாளங்கள் காணப்படுகின்றன. வீடுகள் நிறைந்த பகுதிகளிலும், சிவிலியன் வாகனப் போக்குவரத்துக்கள்மீதும் அவர்கள் இக்குண்டை வீசுகிறார்கள். இக்குண்டுவீச்சு காரணமாக சம்பா பகுதியில் 9 பேர் கொல்லப்பட்டனர். 24 பேர் காயமடைந்தனர். 30 வீடுகள் நாசமாகின. ஜோத்பூரில் அநேக குடிசைகள் சாம்பலாயின.

### கால்வாய் தாண்டப்பட்டது

லாகூர் நகரின் உள் பாதுகாப்பு அரணான இச்சோகு கால்வாயை இப்போது இந்தியத் துருப்புகள் பல இடங்களில் தாண்டியிருக்கிறார்கள். இந்தியத் துருப்புகளின் முன்னேற்றத்தைத் தடுக்கும் பொருட்டு பாகிஸ்தானியர் பாலம் ஒன்றைத் தகர்த்த போதிலும், கண்ணிவெடிகள், கடும் துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவற்றின் மத்தியிலும் இந்தியத் துருப்புகள் முன்னேறினர். இப்போது பாகிஸ்தானியர் கொங்க்ரீட்நில அறைகளில் நிலை கொண்டிருக்கிறார்கள்.

ஸியால்கோட் அரங்கில் முக்கிய ரயில் பாதையைப் பிடித்தபின் நேற்று 2 1/2 நிமிட நேரத்தில் 14 பாகிஸ்தான் டாங்கிகள் அழிக்கப்பட்டன. நேற்றைய சண்டையில் மொத்தம் 26 டாங்கிகள் செயலிழந்தன. 4 டாங்கிகள் கைப்பற்றப்பட்டன. 1 ஸெப்ரிஜெட் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

நேற்று அமிர்தசரஸைத் தாக்க முயன்ற 5 பாகிஸ்தான் ஸெப்ரிஜெட் விமானங்கள் விரட்டப்பட்டன. ஒன்று வீழ்த்தப்பட்டது.

பாகிஸ்தானியரின் பெருமளவு டாங்கிக் கூட்டம் ஒன்றை இந்திய கான்பரா விமானங்கள் தாக்கி கணிசமான சேதத்தைஉண்டுபண்ணியதாயும்அறிவிக்கப்பட்டது.

### தூதர்களுடன் சந்திப்பு

நேற்று இந்திய உதவி வெளிநாட்டுமந்திரி திரு. தினேஷ்சிங் அல்ஜீரியா, சவூதிஅரேபியா, ஈராக், குவாய்த் ஆகிய நாடுகளின் தூதர்களைச் சந்தித்து இந்தோ பாகிஸ்தான் தகராறிலிருந்து எப்போதும்போல் ஒதுக்கியிருக்க வேண்டும் என இந்த நாடுகளைக் கேட்டுக் கொண்டார். ஈரான், துருக்கித் தூதர்களிடமும் அவர் இவ்வாறு கூறியதாகத் தெரிகிறது.

காபூலில் பாரதத்தூதர் ஆப்கன் மன்னரைச் சந்தித்து நிலைமைபற்றி விளக்கினார். பிரதமரையும் அவர் சந்தித்தார்.

மேற்கு பாகிஸ்தானுக்கு சுவீடனிலிருந்து பிராங்பர்ட் வழியாக அனுப்பப்பட்ட ஆயுதங்களை மேற்குஜெர்மனி தடைசெய்து திருப்பி அனுப்பியது.

(4-ம் பக்கம் பார்க்க)

## 6889 இந்தியத் துருப்புக்கள் கொல்லப்பட்டனர் ?

### 387 டாங்கிகளும், 93 விமானங்களும் அழிக்கப்பட்டன

ராவல்பிண்டி, செப். 17

இந்தோ - பாகிஸ்தான் யுத்தத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வரை 6889 இந்தியத் துருப்புக்கள் கொல்லப்பட்டதாய் பாகிஸ்தான் வானொலி அறிவித்திருக்கிறது.

387 இந்திய டாங்கிகளும், 93 இந்திய விமானங்களும் அழிக்கப்பட்டிருப்பதாக அது மேலும் கூறியது.

இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணோவுக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் அனுப்பியுள்ள கடிதம் நேற்று சேர்ப்பிக்கப்பட்டது. யுத்த நிலைமை பற்றி இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

வகர—அடாலி போர் முனையில் இந்தியத் துருப்புக்களின் முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டதாயும், ஸியல் கோட் அரங்கில் இருபகுதிகளில் முன்னேற முயன்ற இந்தியர்கள் தடுத்து நிறுத்தப்பட்டார்கள் என்றும் அது மேலும் கூறியது.

ஸியல்கோட்டில் 36 இந்திய டாங்கிகள் நேற்று அழிக்கப்பட்டன.

இந்தியாவும் பாகிஸ்தானும் உடனடியாக யுத்தத்தை நிறுத்தவேண்டுமென சோவியத் ஜனாதிபதி மிக்கோயன் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

பர்மியத் தலைவர் ஜெனரல் நீவின்னுக்கு அளிக்கப்பட்ட ஒரு விருந்துபசாரத்தில் பேசியபோதே இவ்வாறு அவர் கூறினார்.

### ரஷ்யத் தலைமையில் மாறுதல்?

வாஷிங்டன், செப். 17

ரஷ்ய ஆட்சிபீடத்தில் மாறுதல் ஏற்படவிருப்பதாக இங்கு வதந்திகள் உலவுகின்றன. பிரதமர் கொஸிஜின், கட்சித் தலைவர் பிரஸ்னேவ் ஆகியோர் பதவியிலிருந்து விடுவிக்கப் படுவார்கள் என்றும், அவர்களுக்குப் பதில் ஷெலாபின், ஷுஸ்லோவ் ஆகியோர் முறையே நியமிக்கப்படவிருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது. ஆனால் ரஷ்ய வட்டாரங்கள் இதை மறுத்துள்ளன.

### மந்திரி அடிக்கல் நாட்டுவார்

கடுவெல, வெள்ளி

மத்திய வைத்தியசாலை ஒன்றை கடுவெலயில் ஸ்தாபிப்பதற்கு முன்னோடியாக சுகாதார மந்திரி திரு எம்-டி.ஏச். ஜெயவர்தன நாளை அடிக்கல் நாட்டுவார்.

## சகல பாடசாலைகளிலும் சிங்களம் கற்பிக்கப்படும்

### 5-ம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கட்டாய பாடம்

### கல்வி மந்திரி அறிவிப்பு

பம்பலப்பிட்டி, வெள்ளி

'சிங்களம் இந்த நாட்டின் அரசகருமமொழியாக இருப்பதால் நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் சிங்கள அறிவு இருக்கவேண்டும்'.

இவ்வாறு கல்வி மந்திரி திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை நேற்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

கல்வி, கலாச்சாரஅமைச்சின் மான்யம் கமிட்டி நிலையில் விவாதிக்கப்பட்டபோது டாக்டர் என். எம். பெரேராவின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே கல்வி மந்திரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

விரைவில் பார்லிமெண்டில் கொண்டுவரப்படவிருக்கும் புதிய கல்வி மசோதாவில் தற்போதுள்ளகல்வித்திட்டத்திலுள்ள பலகுறைபாடுகள் நிவர்த்திசெய்யப்படும். பின்வரும் அம்சங்கள் புதிய கல்வித் திட்டத்தில் இருக்கும்.

○ சகல பாடசாலைகளிலும் விவசாயக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல்.

○ தொழிற் கல்விக்கு மேலும் ஊக்கமளித்தல்.

○ சகல பாடசாலைகளிலும் சிங்களம் கற்பித்தல்.

○ 5-ம் வகுப்புக்குப் பின் ஆங்கிலம் கட்டாய பாடமாக்குதல்.

○ அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட பாடசாலைகள் திருப்பி ஒப்படைக்கப்படமாட்டாது.

உயர்கல்விக்கு ஆங்கிலம் அவசியம் எனத் தாம்கருதுவதாக கல்வி மந்திரி குறிப்பிட்டு இதனை முன்னிட்டு ஆங்கில ஆசிரியர்கள் போதிய அறிவு பெற்றிருக்குமாறு பார்த்துக்கொள்ள தாம்நடவடிக்கை எடுக்கப் போவதாகக் குறிப்பிட்டார்.

### வடக்கு, கிழக்கில் சிங்களம் போதிக்க..

திரு இரியகொல்லை வடக்கிலும் கிழக்கிலும் சிங்களம் கற்பிப்பது பற்றிக் குறிப்பிட்டு தெரிவித்ததாவது:

வடக்கிலும் கிழக்கிலுமுள்ள பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பதற்கு ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கான பரீட்சை நடத்தப்படவிருககிறது. தமிழர்களின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிக்கும்நோக்கம் அரசாங்கத்துக்குஇல்லையெனினும் சிங்களம் இந்த நாட்டின் அரசகரும மொழியாகவிருப்பதால் இந் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் சிங்களத்தில் அறிவுபெற்றிருக்கவேண்டும். முந்திய அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட தனியார் பாடசாலைகளை திருப்பி ஒப்படைக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லைஎன்றும்அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினசபை தலைவர்மீதான நம்பிக்கையில்லா தீர்மானம்

## அங்கத்தினர்கள் வராததால்கை விடப்பட்டது

உடுப்பிட்டி, வெள்ளி

நெல்லியடி பட்டினசபைத் தலைவர் திரு. வே. சு. பொன்னையா மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரவிருப்பதாக சில அங்கத்தவர்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு முன்னறிவித்தல் கொடுத்ததைத் தொடர்ந்து சென்ற திங்கட்கிழமை நெல்லியடி பட்டினசபைக் காரியாலயத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சி. சி. மாணிக்கவாசகர் தலைமையில் விசேஷ கூட்டமொன்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு பட்டினசபைத் தலைவரும் இரண்டாம் வட்டார அங்கத்தவருமான திரு. வே. சு. பொன்னையா உட்பட இதர அங்கத்தினர்கள் திருவாளர்கள் பொ. செல்வராசா, வே. கணபதிப்பிள்ளை, க. சின்னையா ஆகியோருடன் நால்வரே சமூகமளித்திருந்தனர். பட்டினசபை உறுப்பினர்கள் மொத்தம் ஏழுபேர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருவாளர்கள் வே. கணபதிப்பிள்ளையும், பொ. செல்வராசாவும் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கூட்டத்தை ஒத்திவைக்கும்படி கேட்டதைத் தொடர்ந்து அவரும் சம்மதித்தார். ஆனல் தலைவர் மீது கொண்டுவரப்படவிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை போதிய அங்கத்தினர்கள் வராதபடியால் சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது.

---

## இவ்வருட இறுதியில் காலிமாநகரசபைத் தேர்தல்

காலி, வெள்ளி

கடந்த மூன்று வருடகாலமாக விசேஷ கமிஷனரின் கீழ் நடைபெற்று வந்த காலி மாநகரசபைக்கான தேர்தல் இவ்வருட இறுதியில் நடைபெறவிருக்கிறது. விசேஷகமிஷனர் தற்போது மீண்டும் தாம் முன்னர் வகித்துவந்த உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பதவியை ஏற்றுள்ளார். மாநகரசபை தற்போது கமிஷனர் திரு. கே. சண்முகத்திஞல் நிர்வகிக்கப்பட்டுவருகிறது,

1966-ம் வருடத்துடன் காலி மாநகரசபைக்கு நூருவது ஆண்டு பூர்த்தியாகிறது.

---

## கோரிக்கை

சுழிபுரம், வெள்ளி

விவசாய ஆசிரியர்கள் நியமனம் செய்யும்பொழுது ஜீ. சீ. ஈ, தராதரமும் கிருஷிகப் பயிற்சியும் பெற்றிருக்கும் தங்களுக்கே முதற் சலுகை அளிக்கவேண்டும் எனக்கோரி மகஜர் ஒன்றை கல்விமந்திரி, விவசாய உணவு மந்திரி மற்றும் அதிகாரிகளுக்கும், கிளிநொச்சி எம். பி திரு. கா. பொ. இரத்தினத்துக்கும் அனுப்பியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செயல் கமிட்டிக் கூட்டத்தில் மேற்படி கோரிக்கையை உடன் சமர்ப்பிக்கவேண்டும் எனவும் ஆகவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.


REGAL--JAFFNA
NOW SHOWING!
GEORGE NADER
IN
SECRET MARK
of
DARTAGNAN
(Totalscope - Eastman Color)



இப்பொழுது திரையிடப்படுசிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) விஜிதா (ஹட்டன்)

மொடேர்ன் (பண்டாரவளை) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (இரத்தினபுரி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2 காட்சிகள்; சனி, ஞாயிறு 4காட்சிகள்

சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர்.விஜயா
நடிக்கும்



கைகொடுத்த தெய்வம்


## மறைந்த சைவப் பெரியாருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், சனி

'ஈழத்திலே சைவ சமய வளர்ச்சிக்கு ஒரு புதுவழியைக் காட்டி, இளைஞர்களிடையே சமயப்பற்றையும் புத்துணர்ச்சியையும் உண்டாக்கிய சைவமணி சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களின் பிரிவு ஈடுசெய்ய முடியாத ஒன்ருகும். அன்ஞர் விட்டுச் சென்ற திருக்கேதீச்சரத்தான் திருப்பணியைச் செய்து முடிப்பதே நாம் அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும்' இவ்வாறு காரைநகர் கிழக்கு இந்துவாலிபசங்கச் சார்பில் களபூமி தெருவடிப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற விசேஷ கூட்டுப் பிரார்த்தனைக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. க. சபாரத்தினம் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் இரு நிமிட மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

சேர் கந்தையா வைத்தியநாதனின் சேவைகளையும், பெருமைகளையும் பாராட்டித் திருவாளர்கள் ஐ. தி. சம்பந்தன், க. அமிர்தசிங்கம் இன்னும் பலர் பேசினர்கள். கூட்டுப் பிரார்த்தனையைத் திரு. சி. ஆறுமுகம் நடத்தினர். கூட்டுப்பிரார்த்தனையின்பின் அன்னாரின் ஞாபகார்த்தமாக அடியார்களுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டது.

---

## அதிகாரிகள் சுறுசுறுப்பு

வல்வெட்டித்துறை, வெள்ளி

கள்ளக் குடியேற்றத்தைத் தடுப்பதிலும், கள்ளக்கடத்தலைத் தடுப்பதிலும் வல்வெட்டித்துறை இராணுவ அதிகாரிகளும், பொலிஸ் அதிகாரிகளும், சுங்க அதிகாரிகளும் தற்பொழுதுதீவிரமாக கடமையாற்றி வருகிருர்கள்.

சாதாரண மீன்பிடி வள்ளங்களையும், கட்டுமரங்களையும் ஒவ்வொரு பகுதி அதிகாரிகளும் மிகவும் கவனத்துடன் பரிசோதனை செய்து வருகிருர்கள்.

---

## யாழ். மாவட்டத்தில் கருவாட்டுப்பேளை தயாரிப்பு

பளை, வெள்ளி

யாழ்ப்பாண மாவட்டத்தில் கருவாட்டுப் பேளைகள் செய்யும் கைத்தொழில் முறை செம்பியன்பற்றுக் கிராமத்தில் முதல் முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக் கைத்தொழிலில் செம்பியன்பற்றைச் சேர்ந்த சுமார் இருபத்தைந்து பெண்கள் பளை கிராம அபிவிருத்தியதிகாரி திரு.டே ஜ. எஸ். பிரடரிக் தலைமையில் ஈடுபட்டுள்ளனர்.. உள்ளூரில் செய்யப்படும் இக் கருவாட்டுப் பேளைகளுக்கு மருதங்கேணிக் கூட்டுறவுச் சங்கம் முதலிடம் அளித்து பேளை ஒன்று 45 சதமாக வாங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இங்கு மாதம் ஒன்றுக்கு சுமார் 1000 பேளைகள் செய்யப்படுகின்றன. இதுபெரும்பாலும் படித்த மாணவிகளுக்கும் வயதுவந்த பெண்களுக்கும் கூடிய வருவாயை அளிக்கக்கூடிய கைத்தொழிலாக அமைந்துள்ளது.

இக்கைத்தொழில் மூன்று மாதத்திற்குள் துரித முன்னேற்றம் அடைந்துள்ளராக அறியப்படுகிறது.

# "விஞ்ஞான முறையில் உற்பத்தியைப்பெருக்கவேண்டும்'

உடுப்பிட்டி, வெள்ளி

''முற்றிலும் விஞ்ஞான முறையைக் கைக்கொண்டு மேல் நாட்டினர் விவசாயத்திலீடு படுவதனுற்ருன் அங்கெல்லாம் உணவுப் பொருட்களுக்காகப் பிறநாடுகளை எதிர்பார்த்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கவில்லை. எனவேதான் நாமும் நம்மிடையேயுள்ள மூடநம்பிக்கைகளை அகற்றி ஏனைய நாட்டினர் போல விஞ்ஞான முறையில் நவீன கருவிகளைக் கையாண்டு உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்'

இவ்வாறுஉணவு உற்பத்தி மேற் பார்வையாளர் திரு. மு கணபதிப்பிள்ளை கரணவாய் தெற்கு விஞேபா இளம் விவசாயிகள் கழக ஆதரவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், வடமராட்சிமண் பயிர்ச் செய்கைக்கு மிகவும் உகர்ந்ததென்றும் மணலும் கழியும் சேர்ந்த இருவாட்டி மணற்தரைகள் வடமராட்சியில் அதிகமாகக் காணப்படுகின்றனவென்றும் உருளைக் கிழங்கு, பம்பா வெங்காயம் முதலிய புதிய உணவுப் பயிர்களையும் விவசாயிகள் பயிரிடவேண்டுமென்றும் சொன்ஞர்.

திரு. ச. நடராஜா பேசுகையில், அரசாங்கம் நாட்டின் பலபாகங்களிலும் கமத்தொழில் விஸ்தரிப்பு நிலயங்களை ஏற்படுத்தியுள்ளதென்றும் இவற்றினுல் இளம் விவசாயிகள் அதிக நன்மை பெற முயற்சிக்க வேண்டுமென்றும் கோழிப் பண்ணைவைத்தலில் இளைஞர்கள் ஈடுபடலாமென்றும் சொன்ஞர்.

# வேலைவாய்ப்பளிக்க முடியாவிடில் விவசாயக்கல்லூரியை மூடிவிடலாம்

## மந்திரி தகா யோசனை

காலி, வெள்ளி

''விவசாயப் பயிற்சிக்கல்லூரியில் பயிலும் மாணவர்கள் தமது பயிற்சி முடிந்து வெளியேறும்போது அரசாங்கம் அவர்களுக்கு வேலை கொடுக்க முடியாத நிலையிலிருந்தால் அக்கல்லூரிகளை மூடிவிடுவதே நல்லதாகவிருக்கும்.''

காலியில் நடைபெற்ற அகில இலங்கை விவசாயப் பயிற்சியாளர்கள் சங்கத்தின் கூட்டமொன்றில் உள்நாட்டுமந்திரி டாக்டர் டபிள்யு. தஹநாயக்காபேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. ஏ. கே. பியதாசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. தஹநாயக்கா மேலும் பேசுகையில், இந்நாட்டில் 17 விவசாயப் பயிற்சிக் கல்லூரிகளிருக்கின்றனவென்றும், எஸ். எஸ். ஸி. சித்தியடைந்த எத்தனையோ மாணவர்கள் இக்கல்லூரிகளில் பயிற்சி பெற்றும் வேலையற்றவர்களாக இருக்கிருர்களென்றும் சொன்ஞர்.

திரு. ஏ. கே. பியதாஸா பேசுகையில், மாணவ ஆசிரியர்கள் விவசாயப் பயிற்சிக் கல்லூரிகளில் ஆசிரியர்களாகவிருப்பதை இச்சங்கம் எதிர்க்க வேண்டுமென்றும், இவர்களுக்கு விவசாயத்தில் போதியளவு அறிவில்லையென்றும் சொன்ஞர்.

## சனசமூக நிலைய அனுதாபம்

இணுவில், வெள்ளி

''இலங்கையில் உள்ள சகல சனசமூக நிலையங்களும் திறம்பட நடக்க வேண்டும், என வாழ்நாள் முழுவதும் அல்லும், பகலும் பாடுபட்ட, உள்ளூர் ஆட்சி விசாரணையாளர் திரு. வி. சி. சண்முகத்தின் மறைவு யாழ்ப்பாண மக்களுக்கு, குறிப்பாக கிராம மக்களுக்கு பேரிளப்பாகும். அவர் காலத்தில் தான் வட பகுதியில் சனசமூக நிலையங்களின் சமாசம் தோன்றியது. இத்தகைய பெரியாரின் மறைவு குறித்து நாம் மிகவும் வருந்துகின்ருேம்.''

இவ்வாறு இணுவில் ஸ்ரீ சிவகாம சுந்தரி சன சமூக நிலையத்தின் தலைவர் திரு. செ. இலகுநாதன், அன்ஞரின் குடும்பத்திற்கனுப்பிய அனுதாபத் தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## 'புதுஉலகம்' அறிமுகவிழா

உடுப்பிட்டி, வெள்ளி

அகிலஇலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் நிர்வாகக் காரியதரிசியாகவும், கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகருமாக விளங்கிய காலஞ்சென்ற ஆசிரியர் க. பசுபதியின் (யாழ்ப்பாணக் கவிராயர்) ஞாபகார்த்தமாக வெளியிட்டு வைத்த 'புதுஉலகம்' கவிதைத்தொகுதியின் அறிமுக விழா வருகிற ஞாயிற்றுக்கிழமை 4 மணியளவில் தேவரையாளி இந்துக்கல்லூரியில் திரு. வ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கிறது. பலர் நூலை அறிமுகம்செய்துவைத்து சொற்பொழிவாற்றுவார்கள்.

# எல்லை நிலைகளை 3 நாளில் . . . .

(3- ம் பக்கத் தொடர்ச்சி)

### பாகிஸ்தான் வாபஸ்

இதற்கிடையில் மத்திய ஒப்பந்த கூட்டுஸ்தாபனத்திலிருந்து (செண்டோ) பாகிஸ்தான் ஒரு பிரதிநிதியைத் தவிர, தனது இதர பிரதிநிதிகள் அனைவரையும் திருப்பி அழைத்துக் கொண்டது.

கூர்க்க சிப்பாய்களை பாகிஸ்தானுக்கு எதிராக உபயோகிக்கக் கூடாது என நேபாளம் இந்தியாவைக் கேட்டிருப்பதாக பாகிஸ்தான் ரேடியோ செய்த ஒலிபரப்பு தவறு என நேபள அரசாங்கம் மறுத்திருக்கிறது. இடதுசாரிக் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. நம்பூதிரிபாத், இதரகட்சிகளைப் போல் தமது கட்சியும் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அபாயம் குறித்து கவலையடைந்திருப்பதாய் பிரதமருக்கு எழுதியருக்கிருர்.

நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு வழக்கம்போல் தஸாராபொது விழாவாக இருக்காது என மைசூரில் அறிவிக்கப்பட்டது,

யுத்தத்தின் காரணமாக பாகிஸ்தானில் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

தேவை
வேப்பங்கொட்டை
சுந்தரம் பிறதர்ஸ்
73, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாண மாநகரசபை

### சோலைவரி மூன்றும் கந்தாயம் 1965.

1965-ம் ஆண்டின் மூன்றும் கந்தாயத்துக்கான சோலைவரிப்பணம் 1965-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 30ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் மூன்று (3-00) மணிக்கு முன்னர் மாநகர சபை அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பிட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் கூடுதலாகப் பத்து வீதம் வெலியாத்துப் பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக் கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 30-9-65 நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும். இவ்விதம் பணம் அனுப்பும்பொழுது வீட்டு இலக்கம், தெருப் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களும் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும்.

ஏ. எச். ஏ. சமி.
மாநகரசபை ஆணையாளர்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
15-9-65. 861

## கேள்வி விளம்பரம்

### முள்ளியவளை கிராமசபை

முள்ளியவளைக் கிராம சபைத் தலைவரால் முள்ளியவளை அண்ணமலை மத்திய பொது நூல் நிலையக் கட்டிடத்திற்கு கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 23-9-65 காலை 9-30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் 22-9-65 மாலை 3-00 மணி வரை ரெண்டர் பணம் ரூபா 50/-ம் பத்திரப்பணம் ரூபா 10/-ம் கட்டுவதன் மூலம் வழங்கப்படும்.

3. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரன் தெரிவு பற்றி அறிவித்தல் கிடைத்தவுடன் ஒப்பந்தம் எழுத ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

4. ஏனைய விபரங்கள் அனைத்தும் கிராமசபை அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

கி. செல்லத்தம்பி,
தலைவர்,
கிராமசபை - முள்ளியவளை.
கிராமசபை அலுவலகம்,
முள்ளியவளை.
14-9-65 862

## ஜி. சி. ஈ. மனு: பத்திரங்கள் 5 ரூபா?

கம்பஹா, வெள்ளி

பரீட்சைப்பகுதி அதிகாரிக்குப் பல கடிதங்கள் எழுதியும் ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சைக்கான மனுப்பத்திரங்கள் இங்குள்ள மாணவர்களுக்கு இதுவரையும் கிடைக்கவில்லையெனத் தெரியவருகிறது.

சில மனுப்பத்திரங்கள் இங்கே ஐந்து ரூபாவிற்கும் விற்கப்பட்டன. மனுப்பத்திரங்களை உரிய காலத்தில் பெறாத மாணவர்கள் பணம் கொடுத்து மனுப்பத்திரங்களைப் பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.




## கொழும்பு

### சனி 18-9-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 படப்பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 செய்திச்சுருள், 7-00 இசைகானம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 விமர்சனம், 9-30 உரைச்சித்திரம், 10-0 நேயர்விருப்பம்.

### ஞாயிறு 19-9-65

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 நிலைய ஒலிப்பதிவுகள், 7-45 தமிழோடிசைப்பாடல், 8-00 பௌத்தாஞ்சலி, 8-15 ஞானமிர்தம்.

344 மீற்றர் & 49 மீற்றர்

8-30 சைவசஞ்சிகை, 9-00 முஸ்லிம் பாடசாலை, 9-30 கத்தோலிக்க கீதங்கள், 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 குதூகலம்.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரைஇசை.

இரவு 6-10 வாத்திய இசை, 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 நேயர் கடிதங்கள், 7-00 பாட்டு, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 மனைவிளக்கு — மாதர்நிகழ்ச்சி, 9-45 மாதர்கேட்டவை, 10-15 தேர்ந்தஇசை.

## பெண்ணைத் தாக்கியவருக்கு 6 மாதச் சிறை

ஊர்காவற்றுறை, வெள்ளி

நெடுந்தீவு கிழக்கைச்சேர்ந்த கதிர்காமர் தம்பிஐயா என்பவர், அதேயிடத்தில் வசிக்கும் விதவையான இராமநாதர் நாகமுத்துவை கைகளாலும், கால்களாலும் தாக்கியதாகவும், பற்களை உடைத்ததாகவும் குற்றஞ்சாட்டி நெடுந்தீவுக் காரியாதிகாரி திரு. எம். அந்தோனிமுத்துவினுல் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. ரி. ஜே. இராசரத்தினம் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு 6 மாத சிறைத்தண்டனை விதித்தார்.

## கிளே-பெட்டர்ஸன் சண்டை

நியுயோர்க், செப். 17

உலக அதிபார குத்துச் சண்டை சாம்பியன், காஸியஸ்கிளே வருகிற நவம்பர் 22ம் திகதி பிளோய்ட்பெட்டர்ஸனுக்கு எதிராக நடைபெறும் சண்டையில் தமது சாம்பியன் பட்டத்தை மீண்டும் நிலைநாட்டப்போவதாய் நிருபர்களிடம் கூறினர்.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகத்துக்குப் பக்கத்திலே சில அடையாளம் தெரியாத விமானங்கள் வட்டமிட்டனவாம். பல விமான எதிர்ப்பு பீரங்கிகள் அவற்றை விரட்டி அடித்ததாக ஒரு செய்தி கூறுகின்றது.

சென்னை முதலிய நகரங்களிலும் தெருவிலே பாதுகாப்புக் குழிகள் வெட்டப்பட்டுள்ளனவாம் தமிழகத்திலும் விமானத் தாக்குதல் ஆபத்து ஏற்படுமென்று பல முன்னேற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இதை எல்லாம் கேட்கும்போது எனக்குப் பழைய நினைப்புகள் வருகின்றன 1942ம் வருடத்திலே ஜப்பானிய விமானங்கள் கொழும்பில் குண்டு வீசிய போது, சிங்களவர் உள்ளிட்டு பலரும் தமிழகத்துக்கு ஓடினர். இப்போது தமிழகத்திலுள்ளவர்கள், நம் இலங்கைக்கு வர ஆவல் கொள்ளக்கூடும்!

ஃ ஃ ஃ

இந்திய-பாகிஸ்தான் சண்டை, அண்ணன்-தம்பி சண்டை. தாயாதிகளுக்குள் நடக்கும் தகராறு இது. வெளியார்கள் இதைச் சமாதானமாகத் தீர்க்க முயல வேண்டும். நல்லவர்கள், கட்சி சேர்ந்து இந்த யுத்தத் தீயில் எண்ணெய் ஊற்ற மாட்டார்கள்.

இலங்கைப் பிரதமர் இவ்விஷயத்தில் நடுநிலைமை வகித்து சமாதானம் ஏற்படுத்த கூடுமான முயற்சி செய்கையில், சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த சில அரசியல் குடுக்கைகள், இந்த அடுத்த வீட்டுச் சண்டையில் குறுக்கிடக் காத்திருக்கின்றன. இந்தோனேஷிய இராணுவ விமானங்களுக்கு இங்கு இடம் தந்திருக்க வேண்டுமாம். பழைய அரசாங்கம் இருந்திருப்பின் அதற்கு இடம் கிடைத்திருக்கலாம். நல்ல வேளை.

சண்டை விமானங்களுக்கு இங்கு நாம் இடம் கொடுத்தால், இலங்கையிலுள்ள நம் தலையிலும் குண்டு விழ எவ்வளவு நேரமாகும்?

முன்னர் ஜப்பான் இங்கு குண்டுவீசக் காரணமென்ன? பிரிட்டிஷ், அமெரிக்க யுத்தக் கப்பல்களும், விமானங்களும் இங்கு தளங்களைப் பாவித்ததால்தான். அடிமைப்பட்ட இலங்கை நடுநிலைமை வகிக்க முடியவில்லை. அதனுல்தான் குண்டு விழுந்தது. இங்கு குண்டு விழாமலும் யுத்தத் தீ பரவாமலும் தடுக்கவேண்டுமாயின், இந்த யுத்தத்தில் நாம் எந்தவிதத்திலும் கட்சி சேருவது புத்தியாகுமா?

ஃ ஃ ஃ

காஷ்மீரும் ஜம்முவும் இந்தியாவுடன் சேரவேண்டுமா அல்லது பாகிஸ்தானுடனு என்று அங்குள்ள பொது மக்களின் விருப்பத்தைச் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அறியவேண்டுமென்று வற்புறுத்துகின்றது, பாகிஸ்தான். அதற்கு உடன்பட்டாலே சண்டையை நிறுத்தமுடியுமென்கின்றது. அதாவது இந்தச் சண்டையைத் தாங்கள் நடத்துவதற்குக் காரணம் காஷ்மீர் பொதுமக்களுக்கு சுயநிர்ணய உரிமை பெற்றுத்தரத்தான் என்று கூறுகின்றது.

ஆனல் இப்போது ஜம்மு-காஷ்மீர் பகுதியிலே பாகிஸ்தான் விமானங்கள் பன்முறையும் குண்டுகள் வீசித் தாக்குவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அங்குள்ள மக்கள் என்னபாடுபடுகின்ருர்களோ!

இந்தக் குண்டுவீச்சு வேண்டுமா வேண்டாமா என்று அம்மக்களிடையே இப்போது வாக்கெடுப்பு எடுப்பதாயின் அவர்கள் தீர்ப்பு எப்படி இருக்கும்? சொல்ல வேண்டுமா?

ஃ ஃ ஃ

இந்தியா - பாகிஸ்தான் யுத்தம் சென்ற 6ந் திகதி ஆரம்பமான முதல் இலங்கைக்கு ஒவ்வொரு நாளும் ஒன்றேகால் லட்ச ரூபாய் வெளிநாட்டுச் செலாவணி வருமானம் கிடைக்கின்றதாம்!

வெளிநாட்டு விமானங்கள் இந்தியா, பாகிஸ்தான் மூலமாக செல்லாமல், இலங்கை கட்டுநாயக்கா மூலம் செல்லுவதாலேயே எதிர்பாராத இந்த அதிகப்படி வருமானமாம். ஒரு நாளைக்குச் சராசரி 30 விமானங்கள் கட்டுநாயக்காவிலும், ரத்மலானையிலும் இறங்குகின்றன. உலகிலுள்ள பெரிய ராட்சத ஜெட்விமானங்களும் வருவதாயும் ஒவ்வொன்றும் 2500 ரூபாய் வாடகைக் கட்டணம் செலுத்துவதாயும், இதைத் தவிர பெட்ரோல் எண்ணெய்க்காகவும் அதிக செலாவணியைச் செலுத்துவதாகவும் தெரிகிறது. கட்டுநாயக்கா விமான நிலையத்தைச் சமீபத்தில் அபிவிருத்தி செய்ததும். மிக நல்லதாயிற்று.

எக்காரணத்தை முன்னிட்டும் நாம் இந்த யுத்தத் தீயில் குதித்தோமாயின் இந்தப் பக்கம் இவ்வித விமானங்கள் எட்டியும் பார்க்குமா?

ஃ ஃ ஃ

கற்றுங்கெரி யோம்பிக் கலியை வாராமே, செற்றுர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய, முற்று வெண்டிங்கண் முதல்வன் பாதமே, பற்று நின்றுரைப் பற்றுவமே.

— திருஞானசம்பந்தர்.

# வரி விளம்பரம்

### தேவை

கைத்தறிகளில் வேலைசெய்வதற்கு பயிற்சியுள்ள பெண்கள் தேவை. யாழ்ப்பாணம் 4-ம் குறுக்குத்தெரு, 25-ம் இலக்கத்தில், 20-ம் திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கும், மாலை 5-00 மணிக்கும் இடையில் நேரில் வருபவர்களுக்கு பேட்டி நடாத்தப்படும். 1038

ஆர்டர்கள் சேகரிக்கும் வேலைகளுக்கு பெண்களும், சைசிக்கிள் ஓடத்தெரிந்த டிலிவரி பையனும் தேவை. சம்பளமும் கமிஷனும் கிடைக்கும். கலாசோதி ஆட்ஸ் இன்டஸ்றீஸ், பஸ் நிலையத்திற்கு முன்பாக யாழ்ப்பாணம். 1044

பண்டத்தரிப்பு கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கங்களின் சமாசக் கைத்தறி நிலையத்திற்கு நெசவு ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட நெசவு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம்: மாதம் ரூ 150/- (எல்லாமுட்பட) இத்துடன் தறிகளில் வேலை செய்வதற்குப் பயிற்சியும் அனுபவமுமுள்ள பெண்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. விண்ணப்பங்கள் தலைவர், பண்டத்தரிப்பு ப. நோ. கூ. ச. சமாசம், பண்டத்தரிப்பு என்ற முகவரிக்குப் பதியப்பட்ட கடிதத்தில் 30-9-65-க்கு முன் அனுப்பப்பட வேண்டும். 1039

### வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

சுன்னுகம் புகையிரத வீதியில் தபால் நிலையத்திற்கு அருகாமையில் 8 பரப்பு வெறும் நிலம் விற்பனைக்கு உண்டு. பொ. நாகரத்தினம், க. செல்லத்துரை மேற்பார்த்து, முதலியார் வளவு, சுன்னுகம். 1043

### விற்பனைக்கு

பெர்குசன் ராக்ரர் மண்ணெண்ணை 1965-ம் ஆண்டுக்கு லைசென்ஸ், இன்சூரன்ஸ் உண்டு. உடன்பாவிப்புக்கு உகந்தது, 383, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் விசாரிக்கவும். தொலைபேசி: யாழ்ப்பாணம் 7113, 1015

1 சிறி 9000வரிசையிலுள்ள NSU 50 C. C. மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. றேடியோ என்ஜினியர்ஸ், 76, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம். 1041

ஒஸ்டின் கேம்பிறிஜ் டிலிவறி வான் 33ஸ்ரீ 1780 உன்னத நிலையில் கே. ஆர். லிங்கம் மில்ஸ், 28, நீராவியடி, யாழ்ப்பாணம், 1037

## முதலிடம்

யாழ்ப்பாணம், சனி

கண்டி செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை ஆணழகன் போட்டியில் யாழ்ப்பாணத்தில் 21 வயதிற்குன் முதல் இடத்தைப்பெற்ற குமரன் இலங்கையிலும் 18 வயதிற்குட்பட்டவர்களில் முதல் இடத்தைப்பெற்றுள்ளார். இவர் யாழ். மத்திய கல்லூரி மாணவராவர்.

## சர்வகலாசாலை . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி: வி. அருணகிரி, எம். சுப்பிரமணியம், செல்வி பி. காந்திமதி, செல்வி ஆர். செல்வலட்சுமி.

கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரி: எஸ். சுவாமிநாதன், செல்வி வி. கந்தசாமி, செல்வி கே. இந்திராணி.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி: கே. ஜெகநாதன், கே. நவரத்தினம், ரி. இராஜேந்திரம், எஸ். செல்லத்துரை, எம். சிவபாதசுந்தரம், செல்வி ஐ. தம்பையா, செல்வி எஸ். வல்லிபுரம், எம். வேலாயுதம்.

யாப்பாணம் தனிப்பட்டவர்கள்): சி. அரியராஜா. என். கதிர்காமநாதன். ஏ. பஞ்சாபகேசசர்மா, ரி. சங்கரப்பிள்ளை. கே. செல்வரத்தினம், கே. சிதம்பரப்பிள்ளை, ரி. சிவசம்பு, எஸ். சிவசுப்பிரமணியம், என். ஐ. சுப்பிரமணியம், எஸ். சுந்தரலிங்கம், எஸ். தவஞானம், சி. திருஞானயோகநாதன், ஐ. வரதராசா, செல்வி பி. ஆர். அல்பேர்ட், செல்வி கே. கமலாம்பிகை, செல்வி எஸ். கந்தப்பு, செல்வி எஸ். கந்தையா, செல்வி பி. குணநேசமலர், செல்வி ஆர். குணமதிதேவி, செல்வி எஸ். யோகயோகேஸ்வரி, செல்வி. எம். இராஜேஸ்வரி. செல்வி எம. நடராசா, செல்வி எஸ். நாகேஸ்வரி, செல்வி கே. பாக்கியம், செல்வி பி, இராஜேஸ்வரி, செல்விஎஸ். சோமசுந்தரம், செல்வி எஸ் சரோஜினி தேவி, செல்வி பி. செல்லையா, செல்வி எஸ். சின்னமணி, செல்வி கே. சிவனந்தி, செல்வி ரி. சோமு, செல்வி ஆர். ஸி. இராசசுந்தரி, செல்வி கே. சுப்பிரமணியம், செல்வி ஏ. திசைவீரசிங்கம், செல்வி ரி. உமாபதிஅம்மா, செல்வி சி கே ஹேரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்ருவது முறையாக பட்ஜட் நிறைவேறியது

கொழும்பு, வியாழன் வரவு—செலவுத்திட்டத்தின் கமிட்டி நிலையான விவாதம் இன்றுடன் முடிவடைந்தது. மூன்ருவது தரமாக பட்ஜட் இன்று சபையில் வாக்கெடுப்பின்றி நிறைவேறியது.

அமைச்சின் மான்யங்கள் பற்றிய விவாதத்தின் போது எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் தெரிவித்த கருத்திற்கு கல்விமந்திரி இரியகொல்ல பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:

ஒரு பகுதியைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்கள் இலாகாக்களின் விதிகளையும் முறைகளையும் மீறி மிருகத்தனமாக நடந்தால் அதன் காரணமாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் அதனை நாம் பழி வாங்குவதென கூறலாமா?

கடந்த மார்ச் தேர்தலின் போது ஆட்சியிலிருந்த கூட்டரசாங்கம் பொதுவாக எல்லார் மீதும் பழி வாங்கியது.

தலைமையாசிரியர்களின் 750 காலி ஸ்தானங்களை 1966-ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன்னர் நிரப்பும்படி நான் கல்வி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

தொடர்ந்து மந்திரி மேலும் கூறியதாவது:-

கல்வி இலாகா தற்பொழுது மிகவும் சிக்கலான நிலையில் இருக்கின்றது. எண்பதுவிதமான சம்பளப் பட்டியல்கள் இருக்கின்றன. இப்படியான ஒரு அபூர்வமான சூழ்நிலையை உலகின் எப்பாகத்திலும் நாம் காணமுடியாது. எந்த ஒரு ஆசிரியராகுதல் அரசியலில் ஈடுபட்டால் அவர் படிப்பிக்கும் கல்லூரியில் மரியாதையுடனும் கௌரவத்துடனும் வேலை செய்ய முடியாது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்கப்படும் என்று கூறப்பட்டிருந்ததால் அவர்களுக்கு அதனை கொடுக்கவேண்டும் என்ற கருத்தல்ல. விதிகளையும் சட்டத்தையும் மீறிநடக்கும் எவரையும் நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

## "எடுக்கப்பட்ட பாடசாலைகள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது"

ஆசிரியர்களுக்கென இலங்கையில் பல பகுதிகளிலும் 5000 இருப்பிட விடுதிகள் வேண்டியிருக்கிறது. இதற்கு பெருந்தொகையான பணம் வேண்டும். ஆனல் தற்பொழுது எங்களிடம் பணம் இல்லை. ஜனப் பெருக்கம் தற்பொழுது கூடிக்கொண்டிருக்கிறது. கல்வி இலாகாவின் மான்யத்தைக் கூட்டியதன் நோக்கம் ஆசிரியர்களைக் கூட்டுவதற்கும் மேலதிக பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கேயாகும்.

மேலும் ஆங்கிலம் தற்பொழுது அத்தியாவசியம் என்பதை நாம் அறிந்துள்ளோம். விஞ்ஞானத்தை ஆங்கில மூலம்தான் சிறப்பாகக் கற்றுக்கொள்ள முடியும். அத்துடன் விஞ்ஞானப் புத்தகங்கள் ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன. தற்பொழுது கல்வி இலாகாவில் சில நாசவேலைகள் நடைபெறுகின்றன. இப்படியான வேலைகளில் ஈடுபடுவோரை நாம் கண்டுபிடித்துத் தகுந்த தண்டனை கொடுப்போம். ஆனல் அரசாங்கத்தினல் எடுக்கப்பட்ட பாடசாலைகள் மீண்டும் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. பட்ஜட் சபையில் மூன்ரும் முறையாக வாக்கெடுப்பின்றி நிறைவேறியது.

ஜனப்பிரதிநிதிகள் சபை மீண்டும் இம்மாதம் 21-ந் திகதி கூடவிருக்கிறது.

## நீர்வேலி கி. ச. இடைத்தேர்தல்

உரும்பராய், வெள்ளி

நீர்வேலி கிராமசபையின் 8-ம் வட்டார (உரும்பராய்) அங்கத்தவரான திரு. கே. இராசையா ராஜினமா செய்ததைத் தொடர்ந்து இவ்வட்டார இடைத்தேர்தலுக்கான அபேட்சா நியமனப்பத்திரங்கள் இம்மாதம் 30-ந் திகதி தாக்கல்செய்யப்படவிருக்கின்றன.

கட்சி அடிப்படையில் போட்டியிடும் அபேட்சகர்கள் கட்சி சின்னங்கள் பெறவிரும்பினுல் குறிக்கப்பட்ட கட்சியிடமிருந்து ஒரு கடிதம் உதவித்தேர்தல் அதிகாரிக்கு அன்று சமர்ப்பிக்கவேண்டுமெனவும் தெரியவருகிறது.

## தொண்டமானுக்கு வரவேற்பு

பருத்தித்துறை, வியாழன்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நியமன எம். பி. யுமான திரு. எஸ். தொண்டமான் உடுப்பிட்டித் தொகுதியில் நடைபெற்ற வரவேற்பொன்றில் கலந்துகொண்டதுடன் சரித்திரப் பிரசித்திபெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்குச் சென்றும் வழிபட்டார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. மு.சிவசிதம்பரத்துடன் ஆலயத்துக்குச் சென்ற அவர் மணற்காட்டு வெளியில் உள்ள முந்திரிகைச் சாகுபடியையும் பார்வையிட்டார்.

திரு. தொண்டமானுக்கு வரணி மகாவித்தியாலய அதிபர் திரு. வி. தங்கராசா தேநீர் விருந்தொன்றளித்துக் கௌரவித்தார். ஸ்தல ஸ்தாபன உதவி ஆணையாளர் திரு. சி. மாணிக்கவாசகர், கரவெட்டி திருஇருதயக் கல்லூரி அதிபர் திரு. வி. நடராசா உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

## சந்தேக நபர் 28-ல் ஆஜராவார்

யாழ்ப்பாணம், வெள்ளி

கரையூரைச் சேர்ந்த சைமன் என்பவர் மரணமானது சம்பந்தமாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரான சுப்பிரமணியம் பெண் அருளம்மா இம்மாதம் 28-ந் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர் செய்யப்படுவார்.

கடந்த திங்கட்கிழமை மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே இராஜரத்தினம் முன்னிலையில் சந்தேக நபர் ஆஜரானபோது ரிமாண்டில் இருக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்,

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## சமூகசேவையாளர் சண்முகம் காலமானர்

சுழிபுரம். வியாழன்

வடபகுதி உள்ளூராட்சி விசாரணையாளரும் பிரபல சமூக சமய சேவையாளருமான திரு. வி.சி. சண்முகம் நேற்றிரவு தமது 53-வது வயதில் காலமானர்.

யாழ்ப்பாண மாவட்ட சனசமூகநிலையங்களின் சமாசத்தின் ஆரம்பகாலம் தொட்டு அதன் வளர்ச்சிக்காக அருந்தொண்டாற்றி வந்த திரு. சண்முகம் வட இலங்கைக் கிராமியக்கலைக் கழகம், யாழ்ப்பாண மாவட்ட புற்றுநோய் நிவாரண சங்கம், யாழ்ப்பாண மாவட்ட ஐக்கியநாடுகள் சங்கம், ஆகிய ஸ்தாபனங்களில் முக்கிய நிர்வாகியாகக் கடமையாற்றிவந்துள்ளார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னர், வவனியா மாவட்டங்களில் கடந்த 20 ஆண்டுகளாக உள்ளூராட்சி விசாரணையாளராகப் பணியாற்றிய இவர் தமது வாழ்வின் பெரும்பகுதியைச் சமூக, சமய, கலாச்சார சேவைகளில் செலவிட்டு வந்துள்ளார்.

## எனது முயற்சி தோல்வியடைந்தது —யு தாண்ட்

லண்டன், செப். 16

இந்திய—பாகிஸ்தான் சண்டையை நிறுத்தவும், பிரச்னையைத் தீர்க்கவும் என ராவல்பிண்டிக்கும் புதுடில்லிக்கும் வந்திருந்த ஐ. நா. பொதுக்காரியதரிசி யு தாண்ட், நியுயோர்க் செல்லும் வழியில் இங்கு தங்கினர்.

'சமரசம் ஏற்படுத்த நான் எடுத்துக்கொண்ட முயற்சி தோல்வியடைந்துவிட்டது. எனினும் நான் திருவாளர்கள் அயூப்கான், சாஸ்திரி ஆகியோருடன் நடத்திய பேச்சுவார்த்தை விபரங்களை பாதுகாப்புச்சபையில் வெளியிடுவேன்' என பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசுகையில் திரு. யுதாண்ட் தெரிவித்தார்,

திரு. யு தாண்ட் நியோர்க்குக்குப் புறப்படுமுன் சாஸ்திரி—அயூப் சந்திப்பு ஒன்று நடைபெறவேண்டுமெனக் கோரி திரு. சாஸ்திரியிடம் கடிதம் சமர்ப்பித்ததாகவும் அதற்கு மிக விரைவில் பதிலளிக்கப்படும் எனவும் இந்தியப் பிரதமர் இன்று லோகசபையில் தெரிவித்தார்.

## சைக்கிள்—பஸ் மோதல்

பருத்தித்துறை, வெள்ளி

சைக்கிளில்சென்றுகொண்டிருந்த குமாரசாமி கந்தசாமித்துரை என்பவரும் இ. போ. ச. பஸ்ஸூம் மோதிக்கொண்டதால் தலையில் காயங்களுடன்மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிசார் ஸ்தலத்துக்குச் சென்று விசாரணைசெய்ததுடன் சாரதியான அருணசலம் இராமலிங்கம் என்பவரை பிணையில் செல்ல அனுமதித்தனர்.

## ஸ்தாபகர்தின விழா

குரும்பசிட்டி, வெள்ளி

சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் தினவிழாவும் இம்மாதம் 20-ந் திகதி நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில் நீதியரசர் திரு. எச். டபிள்யு. தம்பையா கியு. சி., உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், உதவி வித்தியாதிபதி திரு. தணிகாசலம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். கல்லூரி மாணவர்களது நாடகம், [illegible] நிகழ்ச்சிகளும் இடம்பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## பென்ஸ் கார் சுவீப் முடிவுகள்

காலி, வியாழன்

இன்று காலி நகரசபை மண்டபத்தில் இழுக்கப்பட்ட 55-வது தேசியசுவீப் முடிவுகள்: உள்நாட்டுமந்திரி திரு. டபிள்யு தஹநாயகா முதல் பரிசுக்கான சீட்டை இழுந்தார்.

1-வது பரிசு—
55 R 0335 ரூ. 100,000

2-வது பரிசு—
26 B 0046 ரூ. 40,000

3-வது பரிசு—
61 L 0644 ரூ. 10,000

3449 ரூபா 60 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 01 C 049 | 21 V 0043 |
| 09 J 0647 | 36 N 0867 |
| 24 K 0079 | 30 B 0614 |
| 68 A 0114 | 94 S 0179 |
| 51 F 0225 | 07 R 0069 |
| 32 C 0801 | 34 D 0579 |
| 82 H 0379 | 99 J 0887 |
| 97 T 0190 | 87 K 0816 |
| 81 X 0595 | 51 S 0578 |
| 05 T 0492 | 01 Y 0967 |
| 37 C 0628 | 93 A 0138 |
| 41 X 0862 | 30 K 0298 |
| 58 X 0447 | 42 H 0258 |
| 53 R 0194 | 34 V 0719 |
| 67 Y 0967 | 11 N 0106 |
| 93 R 0838 | 08 F 0866 |
| 93 W 0017 | 28 N 0831 |
| 47 Q 0321 | 54 E 0474 |
| 03 R 0169 | 20 J 0359 |
| 52 U 0259 | 76 K 0582 |
| 95 P 0664 | 69 V 0109 |
| 15 Q 0338 | 22 J 0945 |
| 68 S 0992 | 06 C 0596 |
| 22 O 0907 | 26 P 0521 |
| 23 J 0756 | 05 R 0975 |
| 47 E 0194 | 03 X 0572 |
| 05 H 0039 | 87 M 0343 |
| 61 V 0571 | 15 X 0992 |
| 61 P 0777 | 75 B 0632 |
| 97 E 0637 | 85 S 0759 |
| 69 W 0396 | 76 N 0337 |
| 23 N 0025 | 09 K 0821 |
| 26 Q 0062 | 76 O 0609 |
| 21 H 0005 | 91 Y 0173 |
| 62 U 0302 | 51 R 0264 |
| 52 A 0405 | 13 Q 0850 |
| 36 Q 0824 | 62 A 0380 |
| 64 C 0574 | 35 A 1419 |
| 77 T 0903 | 06 M 0621 |
| 49 W 0786 | 42 K 0649 |
| 13 H 0965 | 85 V 0213 |
| 51 A 0987 | 40 G 0975 |
| 31 N 0673 | 76 M 0776 |
| 17 P 0548 | 92 J 0392 |
| 24 E 0965 | 95 F 0806 |
| 90 G 534 | 62 E 0426 |
| 43 R 0757 | 80 P 0676 |
| 40 V 0178 | 19 V 0582 |
| 07 X 0122 | 52 P 0418 |
| 25 T 0961 | 55 L 0244 |

## கலை விழா
### இன்றைய நிகழ்ச்சிகள்

வவனியா, சனி

வவனியா பிரதேசக் கலா மன்றம் முல்லைத்தீவில் நடத்திவரும் கலைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்:

மாலை 5-30 மணி: விழா திறப்புவைபவம், 5-15மணி மிருதங்கம், 5-80: கோலாட்டம், லாசிமா ஆட்டம், 6-00: நாடகம் (ஞானசவுந்தரி), 6-45: மெல்லிசை, 7-15: பரதநாட்டியம், 8-15 இன்னிசைக் கச்சேரி, 9-15: நாட்டிய நாடகம், 10-15: நாட்டுக்கூத்து (கன்னன்), 11-00: நாடகம் (அரிச்சந்திரன்.)

## நாகூரில் .....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மானே இஸ்லாமியர் சங்கம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான யுத்தத்தில் முஸ்லிம்கள் இந்தியாவுக்குப் பக்கபலமாக இருப்பார்கள் என்றும், பாகிஸ்தானிய தாககுதல் இஸ்லாமிய நெறிகளுக்கு முரணனது என்றும் கூறியிருக்கிறது.

## பாரதிக்கு பாராட்டு

கோண்டாவில், வெள்ளி

பாரதியார் தமிழுக்குச்செய்த சேவை சொல்லுதற்கரியது. பாரதி ஒருபுரட்சிக்கவிஞன். அவருக்கு விழாஎடுக்கவும், சிலை எடுக்கவும் வேண்டியதில்லை. பாரதி கண்டகனவை நனவாக்கினுல் அதுவேநாம் அவருக்குச் செய்யும் கைமாருகும். பாரதியார், குழந்தைகளுக்குப் பாடல்கள் பாடியுள்ளார், வயது வந்தவர்களுக்கும் பாடல்கள்பாடியுள்ளார், அவர்பாடலைநாம் பாடும்பொழுது எம்மையறியாமல் மயிர்க்கூச்செறியுதென்று கோண்டாவில் மஞ்சத்தடி சைவ இளைஞர் சங்கத்தின் ஆதரவில் மஞ்சத்தடி பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில் சைவ இளைஞர் சங்கத்தின் தலைவர் திரு. க. சின்னத்தம்பி தமதுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். திருமதி ஈஸ்வரபாதம், திரு. கு. சண்முகலிங்கம், திரு. ச. இரகுநாதன், திரு. ச. குருலிங்கம், திரு. க. ஜெயசுந்தரம் ஆகியோர் பேசினர். கூட்டத்திற்கு திரு. இ. சிறிஸ்கந்தன் தலைமைவகித்தார்.

## சீன எச்சரிக்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டால், ஐ. நா. கொள்கை பற்றி பாகிஸ்தான் மறுபரிசிலனைசெய்யும் என பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ கூறியது முக்கிய கவனத்தில் எடுக்கப்படுகிறது சீனவும், பாகிஸ்தானும் இந்தியா சம்பந்தமாக கூட்டாகச் செயலாற்றுவதையே இது நிருபிப்பதாக அவதானிகள் கூறுகின்றனர்.

வியட்னமில் கொரில்லாக்கள் பெரும்தாக்குதல் ஒன்றை நடத்துவதற்குச் சாதகமான பருவம் இப்போது ஏற்பட்டிருப்பதால், அமெரிக்காவின் கவனம் அங்கு திரும்பியிருக்கும் இச்சமயத்தில், இந்தியா மீது மீண்டும் தாக்குதல் நடத்துவது சரியானதருணம் என சீன கருதுவதாயும் தெரிகிறது.

## யாழ்ப்பாணக்கல்லூரி
### பட்டதாரி மாணவர் பகுதி

பொ. க. த. | பொ. வி. த.
G. A. Q. | G. S. Q.
(வெளிவாரி)

1966 ஆம் ஆண்டுப் பரீட்சைக்குரிய போதன வகுப்புகள் ஐப்பசிமாதத்தொடக்கத்தில் ஆரம்பமாகும். குறிப்பிட்ட கல்வித்துறைக்கு விதிமுறை செய்யப்பட்ட பிரகாரம் க. பொ. த. ப. (சா. த.) தகுதிகளும் அத்துடன்:

1. உ. த. ப. (H.S.C.) பரீட்சையில் சித்தியெய்தியவர்கள்.

அல்லது

2. 1964 ஆம் ஆண்டு க. பொ. த. ப. (உ. த.) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியெய்தியவர்கள் மேற்படி வகுப்புகளில் சேரலாம்.

விபரப் பிரகடனமும் விண்ணப்பப் பத்திரமும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் 27-9-65-ல் முடிவடையும்.

பதிவாளர்.
வட்டுக்கோட்டை.

860

## காணவில்லை

மு. செல்வராசா, வயது 18. திங்கட்கிழமை காலை வீட்டிலிருந்து சைக்கிளில் புறப்பட்டவர் காணவில்லை. பொதுநிறம். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் வி. முருகேசு, சேர்ச் ஒழுங்கை, தாவடி என்ற விலாசத்துக்கு தயவு செய்து தெரிவிக்கவும். 1045

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org